# உடன்பிறப்பே... 2

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகத்தின் அமைப்புச் செயலாளராக உயர்ந்த என்.வி.நடராசன் அவர்கள் பற்றி பார்ப்போம்.**



ஓவியம் : ரவிபேலட்





# ‘ஞாயிறு’ தந்த நடராசன்!

**“ஏறும்பென உழைத்து
எலும்பை சந்தனக் கட்டையெனத் தேய்த்து
மெழுகுவர்த்தி விளக்காக இயக்கம் காத்து
ஒளி பரப்பிடும் உத்தமத் தோழர்”**

இவ்வாறு தலைவர் கலைஞரால் போற்றப்பட்ட உடன்பிறப்பு வேறு யாருமல்ல...‘என்.வி.என்.’ என்று பலராலும் அன்புடன் நினைவுகூரப்படும் என்.வி.நடராசன் அவர்கள்தான். தந்தை பெரியாரால் **‘நேர்மையுள்ள செயலாளர்’** என்று பாராட்டப்பட்டவர். பேரறிஞர் அண்ணாவால் **‘ஓயாது உழைக்கும் என்.வி.என்’** என்று புகழப்பட்டவர்.

என்.வி.என். ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்தார். 1936-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் அண்ணாவை எதிர்த்து வேலை செய்தார். அந்தச் சமயத்தில்தான் இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டங்கள் மெல்ல மெல்ல பரவத் தொடங்கியிருந்தன.

சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியில், தான் கொண்டு வந்த இந்தி எதிர்ப்புத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது என்று தெரிந்ததும், தனது நண்பர்களுடன் காங்கிரஸிலிருந்து விலகி, பெரியாரின் பாதையில், அண்ணாவின் அணியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

இந்தி எதிர்ப்புப் போரில் தான் மட்டுமல்லாமல், தன் குடும்பத்தினரையும் ஈடுபடுத்தியவர். **1938-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில், நடராசனின் இணையர் புவனேசுவரி அம்மையார் தன் கைக்குழந்தையுடன் சிறைக்குச் சென்றார். அதனால்தான் ‘இந்தி எதிர்ப்பு இயக்கம் நமக்கு அளித்த இலட்சிய வீரர் என்.வி.என்’ என்று அண்ணா பாராட்டினார்.**

## ஐவரில் ஒருவர்!

சென்னை செங்குன்றம் அருகில் உள்ள **‘ஞாயிறு’** என்ற ஊரில் **விஜயரங்கம் - தனலட்சுமி** இணையருக்கு 1912-ஆம் ஆண்டு ஜூன் 12 -ஆம் தேதி, என்.வி.நடராசன் இரண்டாவது மகனாகப் பிறந்தார். ‘ஞாயிறு’ என்ற ஊர், ஆங்கிலேயர் காலத்தில் ‘நாயிறு’ என்று வழங்கப்படலாயிற்று. அதனால்தான் ‘ஞாயிறு விஜயரங்கம் நடராசன்’ என்பது ஆங்கிலத்தில் ‘என்.வி.என்’ என்று குறிக்கப்படுகிறது.

**‘ஆனந்த போதினி’** என்ற இதழை உருவாக்கும் அச்சுத் தொழிலாளராக பத்து ரூபாய் ஊதியத்தில் உழைத்த நடராசன், பெரியாரிடம் வந்து சேர்ந்த பின்னர், சென்னை மாவட்ட திராவிடர் கழகச் செயற்குழு உறுப்பினராகவும், பெரியாரின் அலுவலகச் செயலாளராகவும், பின்னர் பெரியாரின் தனிச் செயலாளராகவும் பணியாற்றினார். பெரியாரின் தனிச் செயலாளராக 9 ஆண்டுகள் இருந்தார். பின்னர், பெரியாரிடமிருந்து விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணா தோற்றுவித்தபோது, அவருடன் இருந்த முதன்மையான, முக்கியமான தம்பிகளில் நடராசனும் ஒருவர்.

தி.மு.கழகத்தில் சட்டதிட்டக் குழுவின் செயலாளர், அமைப்புக்குழுச் செயலாளர், செயற்குழு உறுப்பினர், துணைப் பொதுச்செயலாளர், அமைப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை என்.வி.என். வகித்தார்.

1953-ஆம் ஆண்டில் தி.மு.கழகம் அறிவித்த மும்முனைப் போராட்டத்தின்போது, அண்ணா, ஈ.வெ.கி.சம்பத், நாவலர் இரா. நெடுஞ்செழியன், கே.ஏ.மதியழகன், என்.வி.என். ஆகியோர் முன்கூட்டியே கைது செய்யப்பட்டு மூன்று மாத சிறைத் தண்டனைக்கு ஆளாயினர். இது தொடர்பான வழக்கு விசாரணையின்போது, இவர்களை காவல்துறையினர் **‘ஐம்பெரும் தலைவர்கள்’** என்று குறிப்பிட்டனர்.

### அமைச்சர் என்.வி.என்.

1967-ஆம் ஆண்டு, அண்ணாவின் அமைச்சரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, அவரால் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காக தனித்துறை ஒன்று உருவாக்கப்பட்டது. அந்தத் துறையின் பொறுப்பினை முதன்முதலாக என்.வி.என். அவர்களிடம்தான் கலைஞர் ஒப்படைத்தார்.

## பேச்சுரிமைக் காவலர்!

நாடக் கலையில் மிகுந்த நாட்டம் கொண்டவர் என்.வி.என். தனது ‘அண்ணாவுடன் நான்’ என்ற கட்டுரையில், தன் சிறுவயது நாடக அனுபவங்களை அழகாக விவரித்துள்ளார். மேலும், “நாடகக் கலையை ரசிக்கும் பழக்கம் ஏற்பட்டு, நாடகத்தில் ஏதாவது ஒரு வேடத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டது” என்று கூறியிருக்கிறார்.அவரது அந்த ஆசை, அண்ணாவின் **‘வழக்கு வாபஸ்’** என்ற நாடகத்தில் வழக்கறிஞராக நடித்ததன் மூலம் நிறைவேறியது.

இவ்வாறு கலை சார்ந்த ஈடுபாடு கொண்டிருந்ததால்தான் 1950-ஆம் ஆண்டு அக்டோபர் 23-ஆம் தேதி அண்ணாவின் **‘ஆரிய மாயை’**, **‘பெரியாரின் பொன்மொழிகள்’** ஆகிய நூல்களுக்கு அன்றைய காங்கிரஸ் அரசு தடை விதித்தபோது, பேச்சுரிமையை நிலைநாட்ட, அக்டோபர் 26- ஆம் தேதி குன்றத்தூரில் பொதுக்கூட்டம் நடத்தினார் என்.வி.என். இதைத் தடுக்க வந்த காவல்துறையினர் ஏழு முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

### நன்கொடை நடராசன்!

‘என்.வி.என்.’ என்பதை ‘நன்கொடை வாங்கும் நடராசன்’ என்று அண்ணா அவர்கள் நகைச்சுவையுடன் பலமுறை மேடைகளிலும், தனியிடங்களிலும் கூறி மகிழ்ந்திருக்கிறார். அதற்குக் காரணம் கழகத்தைக் கட்டிக் காக்கப் பெட்டியிலே பணம் தேவை என்பதை உணர்ந்து, எவ்விழாவாயினும் நன்கொடை வாங்காமல் செல்வதில்லை என்று செயல்பட்டார்.

## தலைமைக்குக் கீழ்ப்படி!

தி.மு.கழகத்தில் பல பொறுப்புகளை வகித்தாலும், கழக ஆட்சியில் அமைச்சராகப் பதவி வகித்திருந்தாலும், அவருக்கான அடையாளமாக இருந்தது, **‘அமைப்புச் செயலாளர்’** பொறுப்புதான். ‘என்.வி.என். அவர்கள் தன்னைவிட வயதில் மூத்தவராக இருந்தாலும், சமகாலத்தவராக இருந்தாலும், தன்னைவிட வயதில் இளையவராக இருந்தாலும் தான் சார்ந்து இருக்கும் இயக்கத்தின் தலைமைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்னும் அரிய பண்பை அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய அரிய கருத்தாகும்’ என்று தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் **‘என்.வி.நடராசன் மணிவிழா மலரில்’** குறிப்பிடுகிறார்.

என்.வி.நடராசன் அவர்களின் மகன் என்.வி.என். சோமு அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இரு முறையும், ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் இருந்தவர். சோமு அவர்களின் மகள் மருத்துவர் கனிமொழி தற்போது மாநிலங்களவை உறுப்பினராகவும், கழக மருத்துவர் அணியின் தலைவராகவும் இருக்கிறார்.

“கட்சித் தலைமைக்கு தூய்மையான ஆதரவு தந்து, அதன் கொள்கைகளை முறைப்படி நிறைவேற்றி, அதற்கான செயலில் ஈடுபடுவது தான் எந்தக் கட்சியும், தலைமையும் ஏற்றுக்கொள்ளும் செயலாகும். இந்தக் கட்டுப்பாட்டின் வழி நடந்து, கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் நாவலர் அவர்களுக்கும் துணை நின்று கடமையாற்றுபவர்களே அண்ணாவின் வாரிசுகளாக இருப்பதற்குத் தகுதி பெற்றவர்கள் என்பது என்னுடைய பணிவான கருத்தாகும்” என்று கூறிய என்.வி.நடராசன் அவர்கள், அதன்படியே வாழ்ந்து 1975 ஆகஸ்ட் 3-ஆம் தேதி மறைந்தார். நாம் அவரின் நினைவைப் போற்றுவோம்.

(துடிக்கும்...)

**இந்தக் கட்டுரையை இளைஞர் அணி இணையதளத்தில் படிக்க அருகில் உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்.**

## ஃப்ளாஷ்பேக்



### வெற்றிக்கு நன்றி!



முரசொலி முத்து

நீண்ட காலமாக ‘முரசொலி’ முகவராக இருந்த காரணத்தால் முத்து என்ற என் பெயர் **‘முரசொலி’ முத்து** என்றானது. 1986-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில், கழகம் தமிழ்நாட்டின் அனைத்து இடங்களிலும் மாபெரும் வெற்றியைப் பெற்றது. எம்.ஜி.ஆர். ஆட்சி மீது மக்கள் கொண்டிருந்த அதிருப்தி இத்தேர்தலில் வெளிப்பட்டது. திருச்செங்கோடு நகரச் செயலாளராக இருந்த நான், தலைவரை அழைத்து வாக்காளர் நன்றி அறிவிப்புக் கூட்டம் ஒன்றை எங்கள் பகுதியில் ஏற்பாடு செய்திருந்தேன். தலைவர் கலைஞர் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். அப்போது தலைவர் அருகில் அமர்ந்து நான் எடுத்துக் கொண்ட இப்புகைப்படம் என் மனதுக்கு நிறைவை அளிக்கிறது.

**-கே.ஏ.முரசொலி முத்து,
கழகச் சொற்பொழிவாளர்,
திருச்செங்கோடு,
நாமக்கல் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## தமிழ்நாட்டு அரசை ஆளும் பெண்கள்!

இந்தியாவிலேயே மாநில அரசுப் பணிகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு தந்து, இதர மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது தமிழ்நாடு. இது நடந்தது 1989-ஆம் ஆண்டு. அன்றைய கலைஞர் ஆட்சியில், மாநில அரசுப் பணிகளில் 30 சதவிகிதம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. 2021-ஆம் ஆண்டு, நமது கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் தலைமையில் **‘திராவிட மாடல் அரசு’** பொறுப்பேற்ற பிறகு, அந்த இடஒதுக்கீடு 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட பலன் என்ன தெரியுமா? நாட்டிலேயே பெண்கள் மிக அதிக அளவில், மாநில அரசுப் பணிகளில் பணியாற்றும் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது.

தமிழ்நாடு மாநில அரசுப் பணிகளில், 2011-2012 -ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் 62.9 சதவிகிதமாக இருந்த பெண்களின் எண்ணிக்கை, அ.தி.மு.க. ஆட்சியின் இறுதிக் காலத்தில், அதாவது 2018-2019 -ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் 61.5 சதவிகிதமாக குறைந்து, கழகம், ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் மீண்டும் அந்த எண்ணிக்கை 65.9 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது.

அதே காலகட்டங்களில் அகில இந்திய அளவிலான எண்ணிக்கை முறையே 32.4, 35.8 மற்றும் 40.3 சதவிகிதம் ஆகும்.




‘சமூகநீதிக் காவலர்’ வி.பி.சிங் அவர்களுக்கு முழு உருவச் சிலை நிறுவப்படும்’ என்று அறிவித்திருக்கிறார் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள். இத்தருணத்தில் வி.பி.சிங் வாழ்க்கை வரலாறு பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூலை, தமிழில் ‘அரக்கர்’ என்று மொழிபெயர்த்து ஆழி பதிப்பகம் வெளியிட்டது. அதனை தமிழர்கள் அனைவரும் படித்து பயன் பெற வேண்டும். சிலையும் சிந்தனையும் தமிழுக்கு வளம் சேர்க்கும்.

## கருவூலம்

### ஆட்சி நீடிக்க வேண்டும்!

**1967-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க ஆட்சி அமைந்ததை வெகுவாகப் பாராட்டினார் பெரியார். ‘‘இந்திய சரித்திரத்தில், புத்தன், அசோகனுக்குப் பிறகு நமது நாட்டுக்கு இப்போதுதான் ‘பகுத்தறிவாளர் ஆட்சி’ ஏற்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக கிடைக்காத ஆட்சி, இன்னும் பல பத்தாண்டுகள் தொடர்ந்து இருக்க வேண்டும். தமிழர்கள் இந்த ஆட்சியைப் பாதுகாக்க வேண்டும்’’ என புகழ்ந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 96




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131